කර්මාන්ත හා වාණිජ කටයුතු, දිගුකාලීනව අවතැන්වූ පුද්ගලයන් නැවත පදිංචි කිරීම, සමුපකාර සංවර්ධන සහ වෘත්තීය පුහුණු හා නිපුණතා සංවර්ධන අමාත්‍යාංශය

கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு

**Ministry of Industry & Commerce, Resettlement of Protracted Displaced Persons, Co-operative Development and Vocational Training & Skills Development**

අංක 119 (4) දරන නියෝග ප්‍රකාරව රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව
විසින් පාර්ලිමේන්තුවේ සභාගත කරන ලද පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංක 114
දරන වාර්තාව සම්බන්ධයෙන්
ගනු ලැබූ පියවර හා නිරීක්ෂණ ඇතුලත් වාර්තාව - 2017

இலக்கம் (4) 119கொண்ட நிலையக் கட்டளைக்கு இணங்க அரச
கணக்குகள் தொடர்பான செயற் குழுவினால் பாராளுமன்றத்தில்
சமர்ப்பிக்கப்பட்ட பாராளுமன்ற கூற்றுத் தொடர் இலக்கம் கொண்ட 114
அறிக்கை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் மற்றும்
அவதானிப்புகள் உள்ளடங்கிய அறிக்கை 2017

Observation and steps taken in respect of the report of Parliamentary Series
No. 114 of Parliament which presented by the
Committee for Public Accounts (COPA) as per the
Standing Order No 119(4) – 2017

කර්මාන්ත හා වාණිජ කටයුතු, දිගුකාලීනව අවතැන්වූ පුද්ගලයන් නැවත පදිංචි කිරීම,
සමුපකාර සංවර්ධන සහ වෘත්තීය පුහුණු හා නිපුණතා සංවර්ධන අමාත්‍යාංශය
கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம்,
கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு
MINISTRY OF INDUSTRY & COMMERCE, RESETTLEMENT OF PROTRACTED DISPLACED PERSONS,
CO-OPERATIVE DEVELOPMENT AND VOCATIONAL TRAINING & SKILLS DEVELOPMENT

මගේ අංකය / எனது இல. / My No. MIC/FIN/02/05/06 | ඔබේ අංකය / உமது இல. / Your No. | දිනය / திகதி / Date 2019.10.14

**119(4)** ஆம் இலக்க நிலையியல் கட்டளைகளுக்கு உட்பட்ட பொது கணக்குகள் குழுவால் பாராளுமன்றத்திற்கு சமர்பிக்கப்பட்ட அறிக்கைகள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானங்கள் ஆகியவற்றை சமர்ப்பித்தல்.

பாராளுமன்ற அமர்வு இல :- 114 - 2019 ஆம் ஆண்டு

நிறுவனத்தின் பெயர் :- கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள், நீண்ட காலமாக இடம் பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், மற்றும் கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன் விருத்தி அமைச்சு

<u>(அ) கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்ட காலமாக இடம் பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம் மற்றும் கூட்டுறவுத்துறை அபிவிருத்தி பிரிவு</u>

| தொ. இல | 2017 நிதி ஆண்டிற்காக நிதி மற்றும் செயலாற்றுகை மதிப்பீட்டில் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகள் | குறைபாடுகள் / தற்போதைய சூழ்நிலையை சரி செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் |
|---|---|---|
| 01. | அங்கீகரிக்கப்பட்ட மட்டுப்பாடுகளைக் கொண்ட ஒதுக்கீடுகளை மீறுகின்ற கடன் பொறுப்புக்கள் | FR 94 (2) இன் பிரகாரம், தற்போதைய நிதியியல் மதிப்பீடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள மீள எழும் சேவைகளுக்கான அல்லது விநியோகங்களுக்கான நிதி ஏற்பாடுகள் காணப்படுமித்தும், மற்றும் மேலே குறிப்பிட்டவாறு அடுத்த நிதி ஆண்டில் மேலதிக செலவுகளை தாங்க முடியுமென எதிர்பாக்குமிடத்தும், FR 94 (1) ன் விதிகளை மீற அடுத்த நிதி ஆண்டில் செலுத்தப்பட வேண்டிய கடன் பொறுப்பொன்றுக்கு உடன்பட முடியுமாக இருக்கும், அதன்படி, நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

ගරු අමාත්‍යතුමා / கௌரவ அமைச்சர் / Hon. Minister: 011 - 2435248, Fax : 2390985
ලේකම් / செயலாளர் / Secretary: 011 - 2436123, 011 - 2436124, Fax : 2449402
අමාත්‍යාංශය / அமைச்சு / Ministry: 011 - 2392149, 011 - 2392150, Fax : 2390941
විද්‍යුත් තැපෑල / மின்னஞ்சல் / E-mail: secretarymid@gmail.com
ලිපිනය / முகவரி / Address: තැ. පෙ. 570, 73/1, ගාලු පාර, කොළඹ 03, ශ්‍රී ලංකාව
த.பெ. இல. 570, 73/1, காலி வீதி, கொழும்பு 03, இலங்கை
P. O. Box 570, 73/1, Galle Road, Colombo 03, Sri Lanka

| | | |
|---|---|---|
| 02. | குறித்த வருடத்தில், அரசாங்க உத்தியோகத்தர்களின் "பி" கணக்கின் நிலுவைக் கடன் மீதி. | தற்போது வரை, திரு. ஈ.கே.டி. பெர்னாண்டோ அவர்களால் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூ. 100,208.00 இடர்கால கடன் தொகைக்காக கோட்டை நீதவான் நீதிமன்றில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆவர் நீதிமன்றத்தில் இரண்டு முறை முன்னிலையாகத் தவறியமைக்காக நீதிமன்றத்தினால் 2011 ஆம் ஆண்டு ஜுன் 07 ஆம் திகதி அவருக்கு பிடியானை வழங்கப்பட்டது. 2018.08.14 ஆம் திகதி கடிதத்தின் மூலம் கொழும்பு மோசடி புலனாய்வு பணியகம் (CFIB) விசாரித்திருந்த போதிலும், இது வரை பதில் கிடைக்கவில்லை. |
| 03. | நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியில் அமைச்சின் 2017 ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகை அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்பிப்பதில் ஏற்பட்ட தாமதம் | 2017 ஆம் ஆண்டின் செயலாற்றுகை அறிக்கையினைத் தயாரிப்பதில் மொழிபெயர்ப்பு மற்றும் அச்சிடலில் ஏற்பட்ட தாமதம் காரணமாக பாராளுமன்றத்திற்கு சமர்பிப்பதில் தாமதம் ஏற்பட்ட அதேவேளை 28.09.2018 அன்று பாராளுமன்ற செயளாலருக்கு முன்வைக்கப்பட்டு 10.10.2018 அன்று சபையில் சமர்பிக்கப்பட்டது. மேலும் எதிர்காலத்தில் இவ்வாறான தாமதங்களின்றி சரியான தினத்தில் அவ்வறிக்கையை முன்வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

பாராளுமன்ற கூற்றுத் தொடர் இலக்கம் 114 இன் கீழ் அரச கணக்குகள் தொடர்பான செயற் குழுவின் மூன்றாம் அறிக்கையின் அவதானிப்புகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை முன்வைத்தல்

2017 தலைப்பு இலக்கம் :- 197 - (2017 ஆம் ஆண்டு)

அமைச்சின் பெயர் :- திறன்கள் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத் தொழிற் பயிற்சி அமைச்சு

(ஆ) தொழில் பயிற்சி மற்றும் திறன் விருத்தி பிரிவு

<table>
<tr><th>தொடர் இலக்கம்</th><th>செயற்பணி மதிப்பீட்டிற்கு இணங்க 2017 வருடத்திற்காக அடையாளங் காணப்பட்ட பலவீனங்கள்</th><th>பலவீனங்களை நிவர்த்தி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் மற்றும் தற்போதைய நிலைமை</th></tr>
<tr><td>1.</td><td>அங்கீகரிக்கப்பட்ட எல்லையினை மீறி பிணைகள் மேற் கொள்ளப்பட்டமை.</td><td>மீண்டும் வரும் செலவிற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய அத்தியவசிய செலவினங்களுக்காக கட்டயமாக பிணைகள் மேற் கொள்ளப்பட வேண்டியுள்ளது. எனினும் திறைச்சேரி குறை ஒதுக்கங்கள் மற்றும் முன்னைய வருடங்களுக்காக தீர்வு செய்யப்படாத கொடுப்பனவுகளும் இவ்வருட ஒதுக்கங்களின் கீழ் தீர்வு செய்யப்பட வேண்டி ஏற்பட்டமையும் இதற்கு காரணமாகியுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.</td></tr>
<tr><td>2.</td><td>வருடத்திற்கு மேற்பட்ட காலத்திற்கு காணப்படும் நிலுவை காணப்படுகின்றமை.</td><td>அரச உத்தியோகத்தர்களின் முற்பண பீ கணக்கின் கீழ் அறவிடப்பட முடியாத கடன் மிகுதியாக காட்டப்படும் ரூபா 415,750.00 கடன் நிலுவை கீழ் வருமாறு
<table>
<tr><th>உத்தியோகத்தரின் பெயர்</th><th>கடன் வகை</th><th>தொகை (ரூபா)</th><th>மொத்தத் தொகை (ரூபா)</th></tr>
<tr><td>திரு. கே. குணரத்ன</td><td>இடர்க் கடன்</td><td>34,740.00</td><td rowspan="2">285,080.00</td></tr>
<tr><td></td><td>சொத்துக் கடன்</td><td>250,340.00</td></tr>
<tr><td>திரு. ஆர் பியசிரி</td><td>இடர்க் கடன்</td><td>-</td><td>78,718.00</td></tr>
<tr><td>திரு. ஐ.என். கொடிப்பிலி</td><td>இடர்க் கடன்</td><td>-</td><td>51,955.00</td></tr>
<tr><td colspan="3">மொத்தம்</td><td>415,750.00</td></tr>
</table>
</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | | (i) திரு. கே. குணரத்ன<br>இவ் அமைச்சில் சாரதியாக கடமையாற்றிய திரு. கே. குணரத்ன அவர்களால் பெற்றுக் கொள்ளப்பட்டு தற்போது வரையில் அறவிடப்பட முடியாதுள்ள கடன் நிலுவை ரூபா 285,080.00 ஆகும். இவ் உத்தியோகத்தர் 1999/07/19 முதல் சேவையை விட்டு விலகியுள்ளதுடன், அறவிடப்பட வேண்டியுள்ள இடர்க் கடன் தொகை ரூபா 34,740.00 இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தில் பெறப்பட்ட கடன் தொகையாகும். தற்போது கடன் கோவை அழிக்கப்பட்டுள்ளதால் பிணையாளி தொடர்பான விபரம் வழங்கப்பட முடியாதுள்ளதென இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் இலக்கம் RDD/2/8 - பொது மற்றும் 2012.09.25 ஆம் திகதியிலான கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>ரூபா 250,340.00 ஆன சொத்துக் கடன் இவ்வமைச்சிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தாலும், கொள்வனவு செய்யப்பட்ட காணிக்கான ஒப்புப் பத்திரத்தின் தத்துவமளிக்கப்பட்ட அதிகாரம் பதிவு செய்வதற்கு முன் வைக்கப்படவில்லை. இக் கடன் நிலுவையினை அறவிடுவதற்காக திறன்கள் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத் தொழிற் பயிற்சி அமைச்சினால் கொழும்பு மாவட்ட நீதி மன்றத்தில் வழக்கு இலக்கம்: DMR/00620/14 கீழ் வழக்கு தொடரப்பட்டுள்ளது. எனினும் இவ் உத்தியோகத்தர் மரணமடைந்திருந்ததால் அவரை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கான உத்தேச வாரிசுகள் மற்றும் அவர்கள் வசிக்கின்ற கிராம உத்தியோகத்தர் பிரிவு தொடர்பான விபரங்கள் பிரதேச செயலாளர், கிரிந்திவெலவுடம் கோரப்பட்டது. அதன் பின்னர் தொம்பே பிரதேச செயலாளரின் இலக்கம் 1/7/5/2 மற்றும் 2017.02.28 திகதியிலான கடிதம் மூலம் எங்களுக்கு தெரியப்படுத்தப்பட்ட தகவலின் படி 382 – வேரஹெர கிராம உத்தியோகத்தர் பிரிவில் வசிக்கும் திரு. கே. குணரத்னவின் வாரிசுகள் தொடர்பான விபரங்கள் கீழ் வருமாறு |

| முழுப் பெயர் | முகவரி |
|---|---|
| கரவிடகே இந்திரஜித் ரஞ்சித் குணரத்ன | 64 / ஏ, ஹங்கமுவ தோட்டம், வேரஹெர, பெபிலியவல |
| கரவிடகே மஹேஷ் சுரஞ்சித் குணரத்ன | 64, ஹங்கமுவ தோட்டம், வேரஹெர, பெபிலியவல |
| கரவிடகே ஸாமில் நிரோஷன் குணரத்ன | 64, ஹங்கமுவ தோட்டம், வேரஹெர, பெபிலியவல |

அதற்கிணங்க வாரிசுகள் தொடர்பான விபரங்கள் 2017.03.07 ஆம் திகதி சிரேஷ்ட உதவி சட்டத்தரணி, சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அறிவிப்பதற்கு நட வடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது.

(ii) திரு. ஆர். பியசிரி

அப்போது இளைஞர் அலுவல்கள் அமைச்சில் சாரதியாக கடமையாற்றிய திரு. ஆர். பியசிரி அவர்களால் பெற்றுக் கொள்ளப்பட்டு தற்போது வரையில் அறவிடப்பட முடியாமல் உள்ள கடன் நிலுவை ரூபா 78,715.00 ஆகும். இவ் உத்தியோகத்தர் 2010.01.28 ஆம் திகதி வேலையில் இருந்து விலகியுள்ளார். கடனை அறவிட்டுக் கொள்வதற்காக திரு. ஆர். பியசிரி அவர்களுக்கு சட்டமா அதிபர் இலக்கம் சீ/71/2011 (ஜீ) மற்றும் 2014.06.16 ஆம் திகதியிலான கடிதம் மூலம் 2014.06.11 ஆம் திகதி இரத்தினபுரி மாவட்ட நீதி மன்றத்தில் வழக்கு இலக்கம்: 27668 / எம் அழைக்கப்பட்டபோது, குறித்த கடன் தொகை தவணை முறையில் கொடுப்பனவு செய்வதற்கு பரிந்துரை செய்யப்பட்டு இணக்கப்பாடு தெரிவிக்கப்பட்டது. எனினும் அவ் உத்தியோகத்தர் எவ்வித பணத்தினையும் இவ் வமைச்சிற்கு கொடுப்பனவு செய்யவில்லை என்பதுடன் இவ் விடயம் அரசின் உயர் சட்டத்தரணியை விளித்து அனுப்பப்பட்ட இலக்கம் 2/1/20/2/108 மற்றும் 2015.08.28 ஆம் திகதியிலான கடிதம் மூலம் அறிவிப்பதற்கு நடவடிக்கை மேற் கொள்ளப்படுள்ளது. அவ்வாறே குறித்த இணக்கப்பாட்டிற்கு இணங்க திரு. ஆர். பியசிரி அவர்கள் செயற்படாமை குறித்து எங்களால் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைத் தொடர்பாக விசாரித்து அரசின் உயர் சட்டத்தரணி, சட்டமா அதிபர் திணைக்களத்தை விளித்து அனுப்பப்பட்ட இவ் அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளரின் இலக்கம் AMD/01/03/L – பொது மற்றும் 2017.11.08 ஆம் திகதியிலான கடிதத்திற்கு எவ்வித பதிலும் கிடைக்காமையால் முதலாம் இரண்டாம் மற்றும் மூன்றாம் நினைவூட்டல்கள் முறையே 2017.12.12, 2018.01.17 மற்றும் 2018.02.16 ஆகிய தினங்களிலான கடிதங்கள் மூலம் மேற் கொள்ளப்பட்டாலும் அதற்கும் எவ்வித பதிலும் கிடைக்கவில்லை.

| | | |
|---|---|---|
| | | (iii) திரு. ஐ.என். கொடிப்பிலி<br>திறன்கள் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத் தொழிற் பயிற்சி அமைச்சில் கடமையாற்றிய திறன்கள் அபிவிருத்தி உதவியாளர் திரு. ஐ.என். கொடிப்பிலி அவர்கள் சம்பளமற்ற விதேச விடுமுறை பெற்றுக் கொண்டு வெளிநாடு சென்று மீண்டும் கடமைக்கு சமூகமளிக்கவில்லை. இவ் உத்தியோகத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய இடர்க் கடன் நிலுவையான ரூபா 51,955/= அறவிடுவதற்கு, உத்தியோகத்தரின் கடன் பத்திரக் கோவை காணாமற் போயுள்ளதால் கடனை அறவிடுதல் தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்க முடியாதுள்ளது.<br><br>நீண்ட காலமாக வழக்கு தொடரப்பட்டிருந்தாலும் தற்போது வரையிலும் அறவிடுதல் தொடர்பாக பதில் கிடைக்காமையால் பொது நிதி சுற்று நிருபம் 05/2019 இற்கு இணங்க நிதி அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்திற்கு இணங்க கடனை அறவிடாமல் விட்டு விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மேலும் தெரிவித்துக் கொள்கிறேன். |

றிஸாட் பதியுதீன் (பா.உ.)
கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சர்)

றிஸாட் பதியுதீன் (பா.உ)
கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள், நீண்ட காலமாக இடம் பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், மற்றும் கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன் விருத்தி அமைச்சர்.